# லுனாவ சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்தி செயற்திட்டம் - 2012

## 1. அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர் தகவல்கள் மற்றும் விளக்கங்களின் பிரகாரம் இந்த அறிக்கையில் 3 ஆவது பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுந்த செம்மையாக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து

(அ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைச் செயற்திட்டம் பேணியுள்ளதெனவும் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு அடிப்படைகளுக்கமைய 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமைக் கூற்றினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்காக முகாமையினால் திருப்திகரமான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும் எனது அபிப்பிராயம் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 248,250,880 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 9,358,948,517 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | - | 99,860 | 536,247,954 |
| **அபிவிருத்திச் செலவுகள்** | | | |
| பிரதான குடியியல் வேலைகள் | - | 8,136,627 | 5,809,166,321 |
| மீள் குடியேற்றம் | 61,017,374 | 100,433,874 | 796,452,052 |
| சமூக நவீனமயப்படுத்தல் | - | 14,339 | 249,793,262 |
| இயலளவு அபிவிருத்தி | - | - | 45,910,215 |
| ஆலோசனை சேவைகள் | - | - | 925,704,658 |
| காணிச் சுவீகரிப்பு | 53,437,936 | 41,976,423 | 444,873,554 |
| செயற்திட்ட முகாமைத்துவச் செலவினம் | 133,795,570 | 151,826,821 | 453,401,380 |
| கடன் மீதான வட்டி | - | - | 165,760,114 |
| செலவுகளின் கழித்தல்கள் | | | |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | | | (55,978,478) |
| நானாவித வருமானம் | | | (64,258) |
| முற்பண வைப்புக்களை மீளப்பெறுதல் | | | (12,318,257) |
| | 248,250,880 | 302,487,944 | 9,358,948,517 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 சட்டங்கள், விதிகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கால்வாய் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிரசுரிக்கப்பட்ட 2010 யூலை 14 ஆந் திகதிய 1662/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக பாதுகாப்பு எல்லையினை மீறும் வகையில் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மற்றும் சட்டரீதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை என்பன வெளிக்கள கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளின் ‘‘சீ’’ இல் குறிப்பிடப்பட்ட இவ் வெளியிடப்பட்ட பாதுகாப்பில் உள்ள ஏதாவது வாய்க்காலுக்கு கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரமின்றி மழை நீர் வடிகாணை இணைக்க முடியாதிருந்ததுடன் மலக் குழாய், கைத்தொழில் கழிவுகள் அல்லது எதாவது பழுதடைந்த பொருட்களைப் போடுதல், அகற்றுதல் அல்லது அவ்வாறு செய்வதற்காக திட்டமிடலைச் செய்யாதிருக்க வேண்டும்’’ என்ற விடயங்களுக்கு முரணாக தெஹிவல கல்கிஸ்ஸ மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திலும் மொறட்டுவை மாநகர சபை அதிகாரப்பிரதேசத்திலுள்ள 07 அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் செஞ்சிலுவை மற்றும் அரலிய வீடமைப்புத் தொகுதியின் 800 வீடுகள் ஒழுங்கற்ற முறையில் மலக் கழிவுகள் மற்றும் இரசாயனக் கழிவுப் பொருட்களை அகற்றியிருந்தமை கணக்காய்வுக் களப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈடு செலுத்தும் போது உரிய கட்டளை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நட்டஈடு செலுத்தும் வரை அதற்காக 7% வருடாந்த வட்டி செலுத்த

வேண்டியிருந்ததுடன் கொடுப்பனவுகள் தாமதமாகிய காரணத்தினால் மீளாய்வாண்டின் போது இரத்மலானை மற்றும் மொறட்டுவ பிரதேச செயலகங்களினால் முறையே ரூபா 57,361 மற்றும் ரூபா 696,535 தொகைகள் வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) குறிப்பிட்ட திகதியில் ஒப்பந்த வேலைகளை ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு காணியினைக் கையளிக்காமையினால் ஒப்பந்தக்காரரின் உபகரணங்களை அகற்றுதல், திரும்ப ஈடுபடுத்துதல் மற்றும் செயற்பாடற்றுக் காணப்பட்டமை காரணமாகவும் பட்டியல்களுக்கான கொடுப்பனவின் தாமதத்தின் காரணமாகவும் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூபா 483,235,236 தொகை தாமதக் கட்டணமாக ஒப்பந்தகாரருக்கு செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையில் 7 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.

(இ) இந்த லுனாவ செயற்திட்டம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட போதிலும் லுனாவ செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 40,604,364 செலவில் முழுமையான மீள் நிர்மாணங்களைச் செய்திருந்த 4,832 மீற்றர் நீளமான வீதி கழிவு நீர் அகற்றும் செயற்திட்டத்தினால் கழிவு நீர்க் குழாய்கள் வெளிப்பட்டமையினால் முற்றாக உடைந்திருந்தது.

## 3.3 செயலாற்றல்

----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் மூலம் 2,373 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் சில இடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியாக இருந்தமையினால் இழப்பீடு வழங்குவதற்குத் தகுதியான 1,438 காணித்துண்டுகள் மாத்திரமே காணப்பட்டன. எவ்வாறாயினும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதிவரையிலும் 252 காணித்துண்டுகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு அல்லது மீளக் கையளிப்பதற்கு எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களும் இயந்திரங்களும் செயற்திட்டம் பூர்த்தியடைந்ததையடுத்து செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கீழே விபரம் காட்டப்படுகின்ற

நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெறக்கூடிய வகையில் பராமரிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அமைச்சு அல்லது உரிய அதிகாரிகளால் பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

| நிறுவனம் | வாகனம்/ இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி (ரூபா) |
|---|---|
| தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகரசபை | 62,924,977 |
| மொறட்டுவ மாநகரசபை | 170,855,945 |
| இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 216,395,250 |
| மொத்தம் (பெறுமதி சேர் வரி தவிர்ந்தவை) | 450,176,172 |

## 3.4 நோக்கத்திற்கு முரணான விடயங்கள்

தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகரசபை மற்றும் மொறட்டுவ மாநகர சபைக்கு முறையே ரூபா 4,813,500 பெறுமதியான டபிள்கெப் வாகனமொன்றும் ரூபா 9,627,000 பெறுமதியான இரண்டு டபிள்கெப் வாகனங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாகனம் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக மாநகர முதல்வரின் பாவனைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

## 3.5 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மண் புற்பிடிகளுடன் சேர்த்து நிர்மாணிக்கப்பட்ட கேபியன் சுவர்களால் வரம்புகள் தயாரிக்கப்பட்ட பிரதான வாய்க்கால் வழிகள் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தினால் பிரதான அவ்வாய்க்கால்வழி தடைப்பட்டு நீர்வடியாமல் காணப்படுகின்ற நிலைமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) லேக்விவ் சிறுவர் பூங்காவினை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,340,955 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சில பாகங்கள் பராமரிக்கப்படாமையின் காரணமாக உபயோகத்திற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டமை 2013 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2013 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அவசியமான செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படாதிருந்தமையும் நகர சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள சில வாய்க்கால் வீதிகள் குப்பைகள், பல்வேறு கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் இணைப்புச் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக விசேட பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கு ரூபா 17,531,310 பெறுமதியான வாகனங்கள் மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் மொரட்டுவ, லுனாவையில் 8 ஆவது ஒழுங்கையில் 80 பேர்சஸ் கட்டிடத்துடன் கூடிய காணி என்பன பிடித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரிவு 2013 மார்ச் 31 வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இரத்மலான மற்றும் மொரட்டுவ பிரதேசங்களில் கழிவு நீரை அகற்றும் செயற்திட்டத்தினால் களப்புடன் தொடர்புபடுகின்ற வாய்க்கால் வழிகளில் கழிவு நீர் அகற்றப்படுகின்றமையினால் களப்பிற்கு அண்மையில் சேற்றுக் களிமண் படிந்திருந்த நிலைமை அவதானிக்கப்பட்ட போதிலும் அந்நிலைமையினை சரிசெய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்டம் நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு புதிய வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்காக தேசிய செயற்குழுக் கூட்டம் நடாத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) இரத்மலான பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் சில காணித்துண்டுகளின் உரித்து காணி சுவீகரிக்கும் அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் மீளக் கையளிக்கும் வகையில்

செயற்திட்டத்தினால் வரிசை அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் அங்கீகாரம் தாமதமாகியமையின் காரணமாக அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.6 நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டு முடிவில் செயற்திட்டத்தின் நிதியப் பயன்பாடு பின்வருமாறிருந்தது.

| | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குவதற்கு இணங்கிய கடன் தொகை | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியப் பயன்பாடு | நிதிசார் செயற்திறன் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | | | | % |
| | யென் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஜப்பான் வங்கி | 6,906 | 7,516 | 6,888 | 92 |
| இலங்கை அரசாங்கம் | 2,157 | 2,348 | 2,471 | 100 |
| மொத்தம் | 9,063 | 9,864 | 9,359 | 94 |

கடன்தொகை வெளிநாட்டு நிதியப் பிரிவில் தகைமைக் காலம் 2009 ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்திருந்ததுடன் நிதி மீளளிக்கப்படுவதற்காக 2010 ஏப்ரல் வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. கடன் பணத்தில் 92 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய செயற்பாடுகள் ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.7 குறிக்கோள்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட கால்வாய் மற்றும் காண்முறைமைகளுக்குரிய பாதுகாப்பு எல்லைகளிற்கு அப்பால் குடியிருப்பதற்காக ரூபா 5,876,825 தொகையைப் பெற்றிருந்த சில பிரதேச

வாசிகள் மீண்டும் அப் பாதுகாப்பு எல்லையினுள் சட்டரீதியற்ற நிர்மாணங்கள் அல்லது இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தெஹிவளை கல்கிஸ்ஸ மற்றும் மொறட்டுவை மாநகரசபைகளுக்குரியதாகக் காணப்பட்ட மனித வளப்பற்றாக்குறையாலும் உள்ள ஊழியர்களுக்கு இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு பயிற்சி காணப்படாமையாலும் செயற்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட கால்வாய் மற்றும் வடிகாண் முறைமைகள் முறையாகப் பராமரிக்கப்படாமைக்கு வழிவகுத்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) வாய்க்கால் வீதிகளை முறையாகப் பராமரிப்பதற்காக அதன் இருமருங்கிலும் நடைபாதை காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் கால்வாயின் இருமருங்கிலும் உள்ள அரச காணிகள் செயற்திட்டத்தினால் கையேற்கப்பட்டிராமை அல்லது போதிய பாதுகாப்பு வழங்கப்படாமையின் காரணமாக சட்டவிரோத மற்றும் அனுமதியற்ற நிர்மாணங்கள் வாய்க்கால் வீதிகளின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப்படுகின்றமையின் காரணமாக 820 மீற்றர் நீளமான வாய்க்கால் வீதிகளை முறையாகப் பராமரிக்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.